செ.வெ.எண்:888/2017 நாள்:20.11.2017

## பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த விவசாயிகள் தாட்கோ மூலம் இலசவ மின் இணைப்பு பெற்று பயன்பெறலாம்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரோஹிணி ரா.பாஜிபாகரே, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த விவசாயிகள் தாட்கோ மூலம் இலசவ மின் இணைப்பு பெற்று பயன்பெறலாம். இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரோஹிணி ரா.பாஜிபாகரே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

தாட்கோ மூலம் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த விவசாயிகளுக்காக செயல்படுத்தப்படும் துரித மின் இணைப்பு வழங்கும் (Fast Track Power Supply) திட்டத்திற்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பதாரர் பழங்குடியின விவசாயியாக இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் 1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். நிலம் விண்ணப்பதாரருக்குச் சொந்தமாக இருப்பதுடன் அவரது பெயரில் நிலப்பட்டா இருக்க வேண்டும். மேற்கண்ட நிலத்தில் கிணறு அல்லது ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மின் இணைப்பு கோரி விண்ணபத்திருக்க வேண்டும்.

மேற்கண்ட திட்டம் குறித்த விபரங்களை தாட்கோ இணையதள முகவரி http://fast.tahdco.com என்ற இணையதள முகவரியில் விண்ணப்பத்தினை ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யும்போது விண்ணப்பதாரர் பற்றிய விவரங்களுடன் சாதிச்சான்று, குடும்ப அட்டை அல்லது இருப்பிடச்சான்று, வருமானச் சான்று, கல்வித்தகுதி மற்றும் வயதிற்கான ஆதார சான்றிற்கு (பள்ளி மாற்றுச்சான்று, வாக்காளர் அட்டை, பான் கார்டு, ஆதார்அட்டை, மதிப்பெண் சான்று) இவற்றில் ஏதாவது ஒன்றை அதற்கான இடத்தில் குறிப்பிட்டு விண்ணப்பதாரருக்குச் சொந்தமாக இருக்கும் நிலப்பட்டா மற்றும் சிட்டா அடங்கல் நகல், “அ” பதிவேடு நகல், நிலத்தின் கிணறு அல்லது ஆழ்குழாய் கிணறு அமைக்கப்பட்டதற்கான நிலத்தின் வரைபடம், சர்வே எண், மின்

வாரியத்தில் பதிவு செய்த இரசீது நகல், கிணறு அமையப்பெற்றுள்ள கிராமம் மோட்டார் குதிரை திறன், சம்பந்தப்பட்ட மின்வாரிய கோட்டம் ஆகிய விவரங்களுடன் புகைப்படத்தையும் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க உதவி தேவைப்படுபவர்களின் வசதிக்காக அனைத்து தாட்கோ மாவட்ட மேலாளர் அலுவலகங்களிலும் ரூ.20 செலுத்தி விண்ணப்பிக்கும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் விபரங்களுக்கு மாவட்ட மேலாளர் தாட்கோ, சீலநாயக்கன்பட்டி அலுவலகத்தையோ அல்லது 0427- 2280348 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். எனவே தகுதி வாய்ந்த பழங்குடியின விவசாயிகள் இத்திட்டத்தில் பயன்பெற வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ரோஹிணி ரா.பாஜிபாகரே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சேலம்.